திருவண்ணாமலை, வேளாண்மை இணை இயக்குநரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர்– திரு.க. முருகன்,பி.எஸ்சி(வே).,எம்பிஏ.,பிஜிடி ஜெஎம்சி.,

ந.க.அ2/7677/2020

நாள்.09.09.2021

பொருள்– பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் தொகுதி–4ல் அடங்கியுள்ள – 2018–19 மற்றும் 2019–20 ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவிக்குத் தெரிவுச் செய்யப்பட்டு வேளாண்மைத் துறைக்கு ஒதுக்கப் பட்டவர்களுக்குப் பணி நியமன ஆணைகள் வழங்கியது – இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் பணிவரன்முறை செய்து உத்தரவிடுதல் – தொடர்பாக.

பார்வை– (1) வேளாண்மை இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறைகள் எண். அ.நி.பி.5/22094/2020, நாள்.05.08.2020.

(2) இவ்வலுவலகச் செயல்முறைகள் எண்.அ2/7677/2020, நாள்.12.08.2020.

----

உத்தரவு :–

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தினால் 2018–19 மற்றும் 2019–20 ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவிக்குத் தெரிவுச் செய்யப்பட்டு தற்காலிகமாக ரூ.19500–62000 (Level-8) என்ற ஊதிய விகிதத்தில் இளநிலை உதவியாளர் (பிணையம்)–ஆகப் பணி நியமன ஆணை வழங்கிடப் பார்வை (1)–ல் காணும் செயல்முறைகளின்படி இம்மாவட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட, ஒன்பது (9) தேர்வர்களுக்குப் பார்வை (2)–ல் காணும் இவ்வலுவலகச் செயல்முறைகளின்படி இளநிலை உதவியாளர் (பிணையம்)–ஆகப் பணிநியமனம் வழங்கப்பட்ட நிலையில் ஏழு (7) தேர்வர்கள் மட்டும் பணியில் சேர்ந்து கொண்டனர். அவர்களில் பின்வரும் ஆறு (6) பணியாளர்களுக்கு இளநிலை உதவியாளர் (பிணையம்) பதவியில் கீழ்க்குறித்த விவரப்படி பணிவரன்முறை செய்து உத்தரவிடப்படுகிறது.

| வ. எண். | பெயர் / பதவி ( திருவாளர்கள்) | பணிபுரியும் அலுவலகம் | பணியில் சேர்ந்துள்ள நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1. | ந. குமரேசன், இளநிலை உதவியாளர் (பிணையம்) | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், செங்கம் வட்டாரம். | 18.08.2020 முற்பகல் | 18.08.2020 முற்பகல் |
| 2. | மா.வேதவள்ளி, இளநிலை உதவியாளர் (பிணையம்) | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், செய்யார் வட்டாரம். | 20.08.2020 முற்பகல் | 20.08.2020 முற்பகல் |
| 3. | இல. பொன்னுதுரை, இளநிலை உதவியாளர் (பிணையம்) | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், வெம்பாக்கம் வட்டாரம். | 20.08.2020 முற்பகல் | 20.08.2020 முற்பகல் |
| 4. | அ. ராபிக்திபாகர், இளநிலை உதவியாளர் (பிணையம்) | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், தெள்ளார் வட்டாரம். | 20.08.2020 முற்பகல் | 20.08.2020 முற்பகல் |
| 5. | ஆ. தங்கபாண்டியன், இளநிலை உதவியாளர் (பிணையம்) | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், போளூர் வட்டாரம். | 21.08.2020 முற்பகல் | 21.08.2020 முற்பகல் |
| 6. | கோ.வனிதா, இளநிலை உதவியாளர் (பிணையம்) | வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகம், ஆரணி வட்டாரம். | 21.08.2020 முற்பகல் | 21.08.2020 முற்பகல் |

மேற்காணும் பணியாளர்களை மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில், இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் வைத்து உத்தரவிடப்படுகிறது. தகுதிகாண் பருவத்தினை முடித்தப் பின்னரே இரண்டாவது மற்றும் அதனைத் தொடர்ந்த ஊதிய உயர்வுகள் வழங்கப்படும்.

மேற்காணும், பணிவரன்முறை உத்தரவு மாண்புமிகு, சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் மதுரை உயர்நீதிமன்றக் கிளையில் நிலுவையில் உள்ள தொகுதி 4-ல் அடங்கிய பணிகளில் 2018-19 மற்றும் 2019-20 வரையிலான காலங்களில் வழங்கப்பட்ட பணிநியமனங்கள் மீது தொடரப்பட்டுள்ள வழக்குகளின் இறுதி தீர்ப்பிற்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

(ஒம்.)க.முருகன்,
வேளாண்மை இணை இயக்குநர்
திருவண்ணாமலை.

பெறுநர்

மேற்காணும் பணியாளர்கள்.

நகல் வேளாண்மை உதவி இயக்குநர்கள், செங்கம், போளூர், ஆரணி, செய்யார், வெம்பாக்கம் மற்றும் தெள்ளார் வட்டாரங்கள்.

நகல்– வேளாண்மை இயக்குநர், சென்னை – தகவலுக்காகப் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது (அ.நி.பி.5 பிரிவு)

நகல்– அ2 இருக்கை இருப்பு கோப்பிற்கு.

// உத்தரவுப்படி //

கண்காணிப்பாளர்